பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 105

செவ்வாய்க்கிழமை
11 மார்ச் 2025

மாசி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**கைவிடப்பட்ட வீட்டுத்திட்டம்; பெருமளவானோர் கடும் பாதிப்பு!**
விரிவு:- பக். 06

## யாழ்.கல்வியியற் கல்லூரியில் அடிப்படை வசதிகள் இல்லை

### பிரதமர் ஹரிணி கவலை



**கொழும்பு, மார்ச் 11**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இருக்கின்ற நிலையைப் பார்க்கும்போது கவலையளிக்கின்றது. எதிர்காலத்தில் ஆசிரியர்களாக வரக்கூடிய அங்கிருக்கின்ற மாணவர்கள் எந்த வசதியும் இல்லாமல் இருக்கின்றனர். இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**
☞ 11

## வவுனியாவில் முன்னணி கட்டுப்பணம்

வவுனியா, மார்ச் 11
வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.
நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19ஆம் திகதி வரை கட்டுப்பணம்
☞ 11

### கையூட்டுப் பெற்ற

## பொலிஸ் அதிகாரியின் மகனை கைதுசெய்க!

### நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 11
குற்றச்செயல்களில் ஈடுபட்ட நபர்களை சட்டத்தின் பிடியில் இருந்து காப்பாற்றிவிடுவதாகக் கூறி கையூட்டுப் பெற்றுவந்த பொலிஸ் உயர் அதிகாரியின் மகனைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு, யாழ். நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளது.
யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவரின் மகன், பொலிஸ் நிலையங்களுடன்
☞ 11

### சங்குக் கூட்டணி

## நான்கு சபைகளுக்கு நேற்றுக் கட்டுப்பணம்

மன்னார், மார்ச் 11
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் நான்கு சபைகளுக்குப் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செலுத்தியுள்ளது.
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற
☞ 11

### ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## யாழ்ப்பாணத்தில் கூட்டணி; ஏனைய இடங்களில் தனிவழி!

### செல்வம் எம்.பி. அறிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 11
உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் கூட்டணியாகவும், ஏனைய இடங்களில் அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்தும் தேர்தலை எதிர்கொள்வது என்று சங்குச்
☞ 11

### அடாவடித்தனமான

## வலையொளிப் பதிவர்களுக்கு மார்ச் 19 வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து அநாகரிகமாக நடந்துகொண்ட யூடியூப்பரும், அவருடன் தொடர்
☞ 11

## மேன்முறையீட்டு நீதியரசராகிறார் நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர்

கொழும்பு, மார்ச் 11
திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் இன்று உறுதியுரை எடுத்து பதவியேற்கவுள்ளார்.
கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி சுமுது பிரேமச்சந்திரா, கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கே. பிரியந்த பெர்னாண்டோ மற்றும் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் ஆகிய மூவருமே இன்று காலை 9 மணிக்கு பதவியேற்கின்றனர்.
☞ 11

**கடவுச்சீட்டு கோருகின்ற 26,000 புலம்பெயரிகள்!**
விரிவு :- பக். 03

## வடமாகாணத்தில் தற்போது 3,557 ஆசிரிய வெற்றிடங்கள்

நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு
☞ 11




'நீலிக்கண்ணீர் வேலைக்காகாது கண்டியளோ. வசதியளைச் செய்து குடுக்காம கவலைப்பட்டு என்ன பிரியோசனம்?'

## சுகாதார நெருக்கடியை அனுமதிக்கமாட்டோம்

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



மன்னார், மார்ச் 11
இலங்கையில் மீண்டும் சுகாதார நெருக்கடிகள் ஏற்படுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில்
☞ 10

### யாழ். பல்கலையில்

## கலைப் பட்டதாரிகளுக்கு புதனன்று தொழிற்சந்தை!

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர்களுக்கான உள்ளகத் தொழில்சார் பயிற்சிகளை வழங்க முன்வரும் நிறுவனங்களை அடையாளங் காணும் நோக்குடனும், யாழ். பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கும் இலக்குடனும் 'தொழிற் சந்தை 2025' நிகழ்வு நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொழில் வழி
☞ 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

11.03.2025 செவ்வாய்க்கிழமை

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 10.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4013 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 30 39 63 72 |
| விசேட எழுத்து | U |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 10.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1080 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 14 40 42 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 10.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 039 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 0 1 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 10.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2119 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 01 |
| வெற்றி இலக்கங்கள் | 30 64 75 76 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 10.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5771 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 6 5 7 8 4 3 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 10.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1801 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 19 38 49 55 |
| விசேட எழுத்து | G |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 10.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 346 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 7 8 4 3 |

# சூடு பிடிக்கின்றது பட்டலந்த விவகாரம்

## விசாரணை கோரி முறைப்பாடு

**கொழும்பு, மார்ச் 11**

**பட்டலந்த வதைமுகாம் தொடர்பில் முறையான விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று கோரி குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திலும் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார தலைமையிலானகுழு இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளது.

பட்டலந்த வதைமுகாம் தொடர்பான விசாரணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோருகின்றோம் என்று அந்த அமைப்பின் தலைவர் ஜாமுனி காமந்த துஷார தெரிவித்துள்ளார். (எ-25-44)

# தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கத்தால் சதித்திட்டங்கள்

## ஹர்ஷண ராஜகருணா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 11

தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் சில சதித்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடத் தீர்மானித்துள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்றுமுன்தினம் நடத்திய மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தாம் என்ன செய்கின்றோம் என்பது அரசாங்கத்துக்குத் தெரியாது. அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்பது அமைச்சர்களுக்குத் தெரியாது. அனுபவமற்றவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தால் இதுவே இடம்பெறும். பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள்கூட இன்னும் கட்டுப்படுத்தப்படவில்லை. தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் எம்மால் திருப்தியடையமுடியாது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் போன்றோர் தலைமறைவாகியுள்ளனரா அல்லது மறைத்துவைக்கப்பட்டுள்ளனரா என்பது எமக்குத் தெரியாது. சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் அரசாங்கத்தின் பொறுப்பாகும்-என்றார். (எ-33-இ)

# அரகலயவைத் தோற்கடித்ததால் இலக்கு வைக்கப்படும் ரணில்

## உதய கம்மன்பில கூறுகின்றார்

அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நடந்த அரகலயவைத் தோற்கடித்தமையாலேயே ரணில் விக்கிரமசிங்கவை மேற்குலகம் தற்போது குறிவைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார் பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பட்டலந்த முகாம் தொடர்பில் 1989ஆம் ஆண்டிலேயே ரணில் விக்கிரமசிங்கமீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதன்பின்னர் பல தடவைகள் அவர் வெளிநாடுகளுக்குச் சென்று சர்வதேச ஊடகங்கள் முன்னிலையில் கதைத்துள்ளார். ஆனால் அது தொடர்பில் அவரிடம் எவரும் கேள்வி எழுப்பவில்லை.

அரகலயவைத் தோற்கடித்ததால் மேற்குலக நாடுகளுக்குச் சார்பான தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தற்போது எதிரியாகப் பார்க்கப்படுகின்றார். அதனால்தான் பட்டலந்த முகாம் மேற்குலகத்தின் நினைவுக்கு வந்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி அல்ஜெஸீரா தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்றிருந்தாரெனில் உலகப் படத்திலிருந்து இலங்கைப் படம் இல்லாமலேயே போயிருக்கக்கூடும் என்றார். (எ-41-44)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 10.03.2025 | திங்கட்கிழமை | 0479 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| M | 7 2 0 0 6 9 |

**Super Ball**

| திகதி | தினம் |
|---|---|
| 10.03.2025 | திங்கட்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2745 | G | 27 39 51 56 |

**சனிதா**

| திகதி | தினம் |
|---|---|
| 10.03.2025 | திங்கட்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| W | 09 21 59 67 | 4906 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் |
|---|---|
| 10.03.2025 | திங்கட்கிழமை |

| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 07 43 45 55 | 4457 |

**KAPRUKA**

| திகதி | தினம் |
|---|---|
| 10.03.2025 | திங்கட்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| R | 17 | 09 18 44 69 | 1921 |

**அத கோடிபதி**


| திகதி | தினம் |
|---|---|
| 10.03.2025 | திங்கட்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Q | 29 40 51 55 | 2571 |

**JAYODA**

| திகதி | தினம் |
|---|---|
| 10.03.2025 | திங்கட்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| H | 06 11 14 64 | 2110 |




# ரோஹிங்ய அகதிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 11

இலங்கையில் உள்ள ரோஹிங்ய அகதிகள் நேற்றுக் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உணவு, வீடு போன்ற நிரந்தர மற்றும் உடனடி உதவிகளைக் கோரி அவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். "கடலில் இருந்து மீட்கப்பட்டோம். ஆனால் தரையில் உயிரிழக்க விடப்பட்டுள்ளோம்" என்பது போன்ற பாதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ-இ)

# முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு விவேகமான முடிவுகள் தேவை!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 11

இலங்கை பெறும் முதலீடுகள் தொடர்பாகக் கவலை வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும் தக்கவைப்பதற்கும் நாடு விவேகமான முடிவுகளை எடுக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்தின் பொருத்தமற்ற நடத்தை மற்றும் திட்டங்கள் குறித்து ஆர்வம் இல்லாததால், இந்தியக் கூட்டு நிறுவனமான அதானி குழுமம் இலங்கையில் தனது முன்மொழியப்பட்ட திட்டங்களை கைவிட்டுள்ளது.

இந்தியாவின் அதானி குழுமத்துடனான ஒப்பந்தங்களைத் திரும்பப் பெறுவதன் மூலம், இலங்கை மற்ற முதலீட்டாளர்களுக்கான அணுகலைத் தடுத்துள்ளது. அதானி குழுமத்துக்கு மேலதிகமாக, பல சர்வதேச முதலீட்டாளர்கள் அண்மைய காலங்களில் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் மீது வன்முறை புரிவோருக்கு

# தராதரம் பார்க்காமல் தண்டனை அவசியம்!

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் உரை

**யாழ்ப்பாணம், மார்ச் 11**

**பெண்களுக்கு எதிராக வன்முறைகளிலோ, துர்நடத்தை களிலோ ஈடுபடுபவர்கள் தராதரம் பாராமல் தண்டிக்கப்படவேண்டும் என வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், சாவகச்சேரி நகர பொன்விழா மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர்தின விழாவில், கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது-

பெண்கள் சமூகத்தில் குறிப்பாக வேலைத்தளங்களில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். பாடசாலைகளிலும் மாணவிகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றார்கள்.

உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையான ஆண்களால் பல பெண்கள் துர்நடத்தைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். சொந்தச் சகோதரிகளைக்கூட அவர்கள் இவ்வாறு துர்நடத்தைக்கு உள்ளாக்கியுள்ள சம்பவங்கள் வடக்கில் பதிவாகியுள்ளன.

வெளியில் இவற்றைச் சொன்னால் தமது எதிர்காலம் பாதிப்புக்கு உள்ளாகும் என அஞ்சி பல பெண்கள் அவற்றை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். பெண்களுக்கு எதிராக வன்முறைகளிலோ, துர்நடத்தைகளிலோ ஈடுபடுபவர்கள் தராதரம் பாராமல் தண்டிக்கப்படவேண்டும் என்றார். (அ-25-28)






மாட்டுக்கு மாடு சொன்னால் கேக்காது, மணிகட்டின மாடு சொன்னாத்தான் கேக்கும். இன்னும் சிலருக்கோ 'மணிகட்டின மாடு' எண்டு சும்மா வெருட்டினாலே 'கப்சிப்' ஆயிடுவினம். அப்பிடியொரு சம்பவம் கிட்டடியில யாழ்ப்பாணம் ரவுணுக்கு கிட்ட நடந்தது.

ரவுணுக்கு கிட்ட எண்டதால வழக்கமாவே அந்த றோட்டில வாகனப் போக்குவரத்துக் கூட. அதை விட அந்த றோட்டில இருக்கிற தளபாடக்கடை ஒண்டுக்கு சாமான் ஏத்தி, இறக்கிறதுக்கு வாற லொறியள் கன்ரர்களுக்கு அந்தக் கடையை உடன விட்டிட்டுப் போக மனம்வாறேலைப் போல. அதால எப்ப போனாலும் அந் தக் கட்டை இருக்கிற றோட்டின்ர ரண்டு பக்கமும் நீட் டுக்கு வாகனங்களை இரவு பகலா நிப்பாட்டி வைச்சிருப்பினம். அப்பிடி நிப்பாட்டேக்க மற்ற ஆக்களும், வாகனங்களும் போய்வாறதுக்கு இடைஞ்சலா இருக்குமே எண்டு யோசிக்கவும் மாட்டினம். அந்த றோட்டில இருக்கிற குறுக்கொழுங்கைக்குள்ள இருக்கிறவை வெளியில வர ஏலாதமாதிரியும் பாதையை மறிச்சு வாகனங்களை நிப்பாட்டுறவை. இதால அந்த ஒழுங்கையளுக்குள்ள இருக்கிறவைக்கு வாகனம் போகுமட்டும் 'வீட்டுச் சிறைதான்'. 'அண்ணை கொஞ்சம் வாகனத்தை தள்ளி நிப்பாட்டுங்கோ. நாங்கள் போய்வர ஏலாமல் கிடக்கு' எண்டு ஆரும் சொன்னாலும், வாகனக்காரருக்குப் பிடிக்காது. 'எங்கையாவது வழிதெருவில இனிமேல் கண்டால் மேல ஏத்தாமல் விடமாட்டன்' எண்டுற மாதிரி ஒரு மார்க்கமாப் பாப்பினம். அதால எதுக்கு வீண்சோலி எண்டிட்டுக்கு அந்த ஏரியாச் சனம் வாகனங்களை றோட்டுக்கரையில விடுறவையோட மிண்டலுக்குப் போறேலை.

போனகிழமை அந்த ஏரியா ஒழுங்கையில இருக்கிற ஒருத்தரின்ர வீட்டில விடியக் காலமையே காஸ் முடிஞ்சுபோட்டுது. தளபாடக்கடைக்குப் பக்கத்தில இருக்கிற கடைக்கு காஸ் வாங்கப்போயிருக்கிறார். காஸ் வாங்கிப்போட்டு 'அண்ணை என்னால இதைத் தூக்க ஏலாது. வீட்டை கொண்டந்து வைக்க எவ்வளவு முடியும்?'எண்டு கேட்டிருக்கிறார். அந்தக் கடையில இருந்து 100 மீற்றர் தூரத்தில இருக்கிற அவரின்ர வீட்டுக்கு அந்தக் காஸ் சிலிண்டரைக் கொண்டுபோய் வைக்கிறதுக்கு 500 ரூபா கேட்டிருக்கிறார் கடைக்காரர். காஸ் வாங்கப் போனவரோ ' என்னண்ணை உதில இருக்கிற வீட்டில கொண்டந்து வைக்க இப்பிடிக் கேக்கிறியள்?' எண்டிருக்கிறார். அதுக்கு கடைக்காரர் மாட்டன் எண்டிட்டார். அந்த ரேட் கட்டுபடியாகாது எண்டிட்டு , இன்னொரு ஆளுக்கு நூறு ரூபா குடுத்து அந்தச் சிலிண்டரை அவர் கொண்டுபோயிருக்கிறார். அப்பிடிப் போகேக்க ' இதெல்லாம் பிழையான வேலை. நான் இப்பிடி நீங்கள் உதில இருக்கிற வீட்டுக்கு சிலிண்டரைக் கொண்டாறதுக்கு 500 ரூபா கேட்டதை பொலிஸுக்குச் சொல்லுவன், அநுரவுக்கும் கடிதம் போடுவன். இண்டைக்கு இஞ்ச பொலிஸ் வராட்டிப் பாருங்கோ' எண்டு கோபமாச் சொன்னபடி வந்திருக்கிறார். அவர் கத்தினது கடைக்காரருக்கு கேட்டுதோ இல்லையோ, வாகனங்களை றோட்டு நீளம் விட்டிட்டு இருந்த றைவர்மாருக்கு நல்லாவே கேட்டிருக்கு. அவையள் தங்களைப் பற்றித்தான் உந்தாள் பொலிஸில சொல்லியிருக்கு எண்டு நினைச்சிட்டினம். பிறகென்ன? அண்டைக்கு முழுக்க ஒரு வாகனத்தைக் கூட அந்தப்பக்கத்தில காணேலாமக் கிடந்ததாம். கிளீன் ஸ்ரீலங்கா மாதிரி அண்டைக்கு 'க்ளீன் றோட்' எண்டு அங்கத்தைச் சனங்கள் சந்தோசப்பட்டவை. சிலவேளையளில இப்பிடி ஆரையோ வெருட்ட ஆரோ பயப்பிடுறதால நல்லதுகளும் நடந்திடும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

# 26,000 புலம்பெயரிகள் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பு

புதிய கடவுச்சீட்டுக்காக 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்று, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த விண்ணப்பங்கள் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களால் பெறப்பட்டு சுமார் இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. அந்தக் கடவுச்சீட்டுகள் காலாவதியாகிவிட்டதால் , வெளிநாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர். தற்போதைய அரசாங்கம் இந்த நெருக்கடியை உருவாக்கவில்லை. இருப்பினும், இந்த மாத இறுதிக்குள் இந்தப் பிரச்சினையை முடிந்தவரை தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். என்றார். (அ-25-இ)

# பிரபல பாடகர் பிளெக் இலங்கைக்கு வருகை

கொழும்பு, மார்ச் 11

அமெரிக்காவின் பிரபல பாடகர் அலோய் பிளெக் மூன்று நாள்கள் சுற்றுலாப் பயணமாக நேற்றுக் காலை இலங்கை வந்தடைந்துள்ளார். அலோய் பிளெக் இலங்கையின் சுகாதாரத் துறையில் முதலீட்டுத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக இந்தப் பயணத்தின்போது கலந்துரையாடவுள்ளார். (அ-எ-இ)

# புதையல் தோண்டிய இளைஞன் கைது

பழங்காலப்பொருள்களை கையகப்படுத்துவதற்காக , சட்டவிரோதமாக புதையல் தோண்டிய சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெலிகந்தப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதான சந்தேகநபர் 28 வயதுடைய அசேலபுர பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-25, இ)

# 'ஈ-சிகரெட்' சட்டவிரோதம்



கொழும்பு, மார்ச் 11

ஈ-சிகரெட்டுகள் சட்டவிரோதமானவை. எனவே ஈ-சிகரெட்டுகளைப் பயன்படுத்துபவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், ஏப்ரல் முதலாம் திகதிமுதல் சாதாரண சிகரெட்டுகளுக்கு விதிக்கப்படும் நிறுவன வருமானவரியை 45 வீதமாக அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-25-இ)

# போர்வைக்குள் 'ஹஷீஷ்' வெளிநாட்டு யுவதி கைது

கொழும்பு, மார்ச் 11

பயணப்பொதியில் போர்வைக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த 175 மில்லியன் ரூபா பெறுமதியான 17 கிலோ573 கிராம் ஹஷீஷ் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரான பெண் 20 வயதுடைய கனேடிய இளங்கலைப் பட்டம் பெறவிருக்கும் [illegible] வருகைதரும் முதல [illegible] (அ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்னை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.

**மிதுனம்:** தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.

**கடகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கூடிவரும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** சிம்மராசி அன்பர்களே! உற்சாகமாகச் செயல்படும் நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கன்னி:** கன்னிராசி அன்பர்களே! மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவாகச் சிந்திக்கும் திறன் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும்.சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும். அலுவலகத்தில் பணிச்சுமை சற்று அதிகமாக இருக்கும்.

**விருச்சிகம்:** அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும். அலுவலகத்தில் பணிச்சுமை சற்று அதிகமாக இருக்கும். சக பணியாளர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு:** தாயின் விருப்பத்தை நிறை வேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். குடும்பத்துடன் உறவினர், நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று வருவீர்கள்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடைகளும் தாமதமும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபச் செய்தி இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்

# நியூஸிலாந்தை வீழ்த்தி சம்பியனானது இந்தியா

டுபாய், மார்ச் 11

**சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி இந்திய அணி கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.**

மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய இறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்தால் நிர்ணயிக்கப்பட்ட 252 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49 பந்துப்பரிமாற்றங்களில் 6 விக்கெட்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இறுதிப்போட்டி டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. நியூஸிலாந்து அணிசார்பாக டேரைல் மிச்சல் 63 ஓட்டங்களையும், மைக்கல் பிரஸ்வெல் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில் குல்தீப் யாதவ் மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

252 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இந்திய அணியின் சார்பாக அணித்தலைவர் ரோஹித் சர்மா 76 ஓட்டங்களையும் ஸ்ரேயாஸ் ஐயர் 48 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர்.

நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில் சான்ட்னர் மற்றும் பிரஸ்வெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் ஊடாக இந்திய அணி மூன்றாவது முறையாக சம்பியன்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. 2002 மற்றும் 2013ஆம் ஆண்டுகளிலும் இந்திய அணி சம்பியன்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)





16 வயதுக்குட்பட்டோருக்கான வலைப்பந்து

## முதலிடம் யாழ்.இந்து மகளிர் அணி; 2 ஆம் இடம் யாழ்ப்பாணக்கல்லூரி

யாழ்ப்பாணம், மார்ச் 11

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் பிரித்தானியா தமிழ்ப் பாடசாலைகள் அமையத்தின் அனுசரணையுடன் வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய போட்டியில் 16 வயதுப் பிரிவில் யாழ். இந்து மகளிர் அணி முதலிடத்தை தனதாக்கியது.

இந்த வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி மோதியது. ஆரம்பம் முதலே இந்தப் போட்டியில் ஆதிக்கம் செலுத்திய யாழ். இந்து மகளிர் கல்லூரியின் வீராங்கனைகள் 28:11 என்ற அடிப்படையில் யாழ். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வீழ்த்தி மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றனர்.

யாழ். இந்துமகளிர் கல்லூரியின் மாணவிகளான ரி.தர்மினி மத்திய பிரதேச சிறந்த வீராங்கனை யாகவும், ஆர். கிருத்திகா பேற்றுக்கு எய்யும் சிறந்த வீராங்கனை யாகவும், ரி. அபிநயா சிறந்த பேற்றுக் காப்பாளராகவும், எ.டினுயா 16 வயதுப் பிரிவின் வலைப்பந்தாட்ட ராணி யாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (அ-41-125)



# மகளிர் கபடித் தொடர் அதிசயம் அணி வாகை

பச்சிலைப்பள்ளி பிரதேசமட்ட ரீதியிலான பெண்களுக்கான கபடித் தொடரில் அதிசயம் விளையாட்டுக்கழகம் சம்பியனானது. பளை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் அதிசயம் விளையாட்டுக் கழகமும், சாலை விளையாட்டுக் கழகமும் நேருக்குநேர் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பான இந்தப்போட்டியில் சாலை விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி, அதிசயம் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. (அ.25.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# மோடிக்கு முன்னுள்ள கடப்பாடுகள்

இந்தியப் பிரதமர் மோடி ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்பது உறுதியாகியிருக்கின்றது. ஜனாதிபதி அநுரவின் இந்தியப் பயணத்தின்போதே, பிரதமர் மோடியின் இலங்கைப் பயணம் பற்றிய விடயம் தெரியவந்தாலும், பயணம் இறுதிப்படுத்தப்படுவதில் இழுபறிகள் இருந்து வந்தன. இவ்வாறான பின்னணியில்தான், ஒருவாறாக மோடியின் இலங்கைப் பயணத்துக் கான திகதிகள் நிர்ணயமாகியிருக்கின்றன. பிரத மர் மோடி இலங்கைக்கு வருவது இதுவொன்றும் முதல் முறையல்ல. 2015ஆம் ஆண்டு, 2017ஆம் ஆண்டு மற்றும் 2019ஆம் ஆண்டு என மூன்று தடவைகள் அவர் இதற்கு முன்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். ஏப்ரலில் இடம் பெறவுள்ள பயணம் அவரின் நான்காவது சுற்றுப் பயணமாகும். ஆனால், மோடி இதற்கு முன்னர் மேற்கொண்ட மூன்று பயணங்களைக் காட்டிலும் இந்தப் பயணம் மோடிக்கும், இந்தியாவுக்கும், இலங்கைக்கும் மிகவும் முக்கியமானது.

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியமைத்த பின்னர், சீனாவின் செல்வாக்கு இலங்கைக்குள் மிகையாகவே அதிகரித்துள்ளது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்குச் சீனாவின் செங்கொடி இலங்கைக்குள் அகலப் பறந்துகொண்டிருக்கின்றது. இதில் கோடிட்டுக் காட்ட வேண்டிய விடயம் என்னவென்றால், புவியியல் ரீதியிலும், அரசியல் ரீதியிலும் இலங்கைக்கு நெருக்கமாக உள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களிலும் இப்போது சீனா நேரடியாகத் தலையிட ஆரம்பித்திருக்கின்றது என்பதே. இனங்களுக்கு இடை யிலான விவகாரங்களுக்கான சீன அமைச்சர் தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு ஐந்து நாள்கள் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்து அறியுமளவுக்கு சீனம் இலங்கையை நெருங்கியுள்ள பின்னணியில்தான், பிரதமர் மோடியின் இலங்கைக்கான பயணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியத்தின் இருப்பும், தமிழர்களின் இருப்பும் இந்தியாவின் இருப்புக்கு சாதகமானது என்ற விடயம் இன்று பட்டவர்த்தனமாகியுள்ள நிலையில், தனது பயணத்தின்போது தமிழர்களின் நலன் சார்ந்து சிந்திக்கவேண்டிய கடப்பாடு இந்தியப்பிரதமர் மோடிக்கு இருக்கின்றது.


மாகாணசபைத் தேர்தல்கள், புதிய அரசியலமைப்பு, வடக்குக் கிழக்கின் அபிவிருத்தி, அத்துமீறிய மீன்பிடி என்று பிரதமர் மோடியின் நேரடித் தலையீடு தேவைப்படும் விடயங்கள் பலவும் இலங்கையில் உள்ளன. ஆதலால், ஏப்ரல் பயணத்தின்போது பொறுப்புணர்ந்து தனது கடமைகளை நிறைவேற்றவேண்டிய கட்டாயத்தனத்தில் பிரதமர் மோடி நிற்கின்றார். அதிலிருந்து அவர் தவறும் பட்சத்தில், சீனத்தின் ஆதிக்கத்துக்கு தானே வழியேற்படுத்திவிடும் செயற்பாட்டையே இந்தியப்பிரதமர் மோடி செய்கின்றார் என்றும் கொள்ளலாம். யானை தன் தலையில் தானே மண்ணள்ளிப்போடும் வேலையை மோடி செய்யமாட்டார் என நம்புவோம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உண்மையை நேசி ஆனால்
பிழையை மன்னித்து விடு.

– வால்டேர் –




# உள்ளூராட்சித் தேர்தலில் ஜே.வி.பி.க்கு சரிவு நிச்சயம்!



## ரஞ்சித் மத்துமபண்டார கணிப்பு

**கொழும்பு, மார்ச் 11**

**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களில் ஜே.வி.பி. பெற்றுக்கொண்ட வாக்குகளை உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பெற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. பெற்றுக்கொண்ட 68 இலட்சம் வாக்குகளை இம்முறை பெறமுடியாது என்பதை உறுதியாகக் கூறமுடியும். கடந்த தேர்தல்களில் ஐக்கிய மக்கள்சக்திகொழும்பில் பல தொகுதிகளில் வெற்றிபெற்றது. அந்தவகையில் இம்முறையும் எம்மால் வெற்றிபெறமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அமையும். 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தல், 2019 ஜனாதிபதித் தேர்தல், 2020 பொதுத் தேர்தல் என்பன இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியைவிட்டு வெளியேறுமளவுக்கு புத்திசுயாதீனமற்றவர்கள் எமது கட்சியில் இல்லை.

ஆனால் ஊழல், மோசடியற்ற எவரும் எம்முடன் இணையலாம். ஜே.வி.பி.யைத் தவிர வேறு எந்தக் கட்சியிலிருப்பவர்களுக்கும் அதற்கு வாய்ப்பளிக்கப்படும்-என்றார். (அ-33-இ)

# பொலிஸை 'மேய்ந்த' மாடு

கொழும்பு, மார்ச் 11

நாரம்மல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஆகியோரை உடனடியாகச் சேவையில் இருந்து இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மெதியகனே பிரதேசத்தில் மாடு திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் முறைப்பாடு அளிக்கவந்த ஒருவரின் முறைப்பாட்டைப் பதிவு செய்யத் தவறியதை அடுத்தே அவர்களுக்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# உள்ளாட்சித் தேர்தலில் களமிறங்கும் சமல்!

கொழும்பு, மார்ச் 11


உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி சார்பில் நானும் போட்டியிடவுள்ளேன் என்று முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசியலில் மேலிருந்து கீழே வந்தோம். தற்போது கீழிருந்து மேலே செல்வோம். மக்கள் எம்மை நிராகரிக்கவில்லை. மாற்றம் என்ன வென்பதை மக்கள் இப்போது புரிந்துவிட்டனர். அதனால்தான் மாற்றத்தை ஏற்படுத்த தற்போது விரும்புகின்றனர் - எனவும் மேலும் தெரிவித்தார். (அ-41-44)

# சிறுநீரகப் பாதிப்பு அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 11

நீரிழிவு நோய் காரணமாக நாட்டில் 2.2 மில்லியன் மக்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)



# மாவாவுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 11

10 கிராம் மாவா போதைப் பாக்கை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-எ-125)

நாளை
புதன்கிழமை - மாசி - 28
12.03.2025
சுபநேரம் : 04.52 - 06.22
ராகுகாலம் : 12.22 - 01.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட வீட்டுத்திட்டம்; பெருமளவு மக்கள் பாதிப்பு

## உரிய தீர்வை வழங்குமாறு ரவிகரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 11

**கடந்த 2018 ஆம் ஆண்டு அப்போதைய வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸவினால் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டம், அரசாங்கம் மாறியதன் காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இதனால் வன்னி மற்றும் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனரென சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய தீர்வினை வழங்குமாறு வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக்கவிடம் கோரிக்கையும் விடுத்துள்ளார்.**

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தின் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதியில் வெள்ள இடர்களினால் பாதிக்கப்பட்டவர்கள், யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கி வாழ்ந்து மீள்குடியேற்றப்பட்டவர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள், வறுமைக்குட்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்கள், ஆதரவற்ற சிறுவர்கள், யுத்தத்தின்போது கணவனை இழந்த பெண்தலைமைக் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் என்ற அடிப்படையில் வசதிகளற்ற, தற்காலிக வீடுகளில் கையறுநிலையில் இருந்தவர்களுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடானது இரண்டுமாத காலப்பகுதிக்குள் கட்டிமுடிக்கப்படவேண்டும் என்ற நிபந்தணையின் அடிப்படையில் வழங்கப்பட்டது. இருப்பினும் அரசாங்கம் மாற்றப்பட்டதன் விளைவாக இந்தத்திட்டம் இடைநிறுத்தப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதனைத்தொடர்ந்து கடந்த 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களைத் தவிர்த்தே வழங்கப்பட்டன . அரசாங்கம் மாறினாலும் திட்டம் தொடர்பாக எந்த விதமான முன்னகர்வுகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும் என்றார். (அ-25-246)

# இளவயதுக் கர்ப்பம் அதிகரிப்பு உடனடிக் கவனம் தேவை

## ரோகிணி கவிரத்ன தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 11

இளவயதுக் கர்ப்பம் தற்போது இலங்கையில் உடனடியாகக் கவனம்செலுத்தப்பட வேண்டிய விடயமாகக் காணப்படுகிறது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோகிணி கவிரத்ன் தெரிவித்துள்ளார்.

அவர் நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவிக்கையில், கடந்த வருடம் பதினாறு வயதுக்குக் குறைந்த சிறுமிகள் 216 பேர் கர்ப்பமுற்றுள்ளார்கள், அத்துடன் பத்து வயதுச் சிறுமி ஒருவரும் கர்ப்பமுற்றுள்ளார் . எனவே இந்த விடயம் தொடர்பாக நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்றார். (அ-33-6)

# மாணவர்களுக்கு கௌரவிப்பு

இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லண்டன் கனகதுர்க்கை அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் மருத்துவக் கலாநிதி வே.பரமநாதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.நவநீதன், கௌரவ விருந்தினராக யாழ்.தனங்களப்பு அ.த.க. பாடசாலை அதிபர் உ.தனசங்கர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ. 41159)

★★★

போக்கட்டி அ.த.க பாடசாலையின் தரம் 5 புலமைப் பரிசில்பரீட்சையில்சித்தியடைந்தமாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அதிபர் திருமதி தர்சினி சுதாகரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப.சுதர்சன், சிறப்பு விருந்தினராக முன்னாள் ஓய்வுநிலை ஆசிரியர் ச.நந்தகுமார், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க நோர்வேத் தலைவர் கா.நிர்மலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-41-159)



# மெய்வன்மைப் போட்டி

வேலணை மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரியின் முதல்வர் கஸ்ரன் ரோய் தலைமையில் கல்லூரி மைதானத்தில், கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழகத்தின் உடற்கல்வித் துறையின் விரிவுரையாளர் இளம்பிறையன், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய நிர்வாக உத்தியோகத்தர் ஸ்ரீரங்கநாதன், தீவகக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செல்வி சி.துஷ்யா, வேலணைப் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் ரம்யா ராகுலன், மண்கும்பான் கடற்படைக் கட்டளை அதிகாரி ரி.ஆர்.எல்.பியசேன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ-25-27)

# இந்துசாதனத்துக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 11

சைவபரிபாலன சபையினால் சைவசமயத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக 1889ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வந்த 'இந்துசாதனம்' பத்திரிகை சபையின் நன்நோக்கத்துக்கமைவாக காலாண்டுக்கு ஒருமுறை புதிய அம்சங்களுடன் மீண்டும் வெளிவரவுள்ளது. எனவே இந்துசாதனம் பத்திரிகைக்கான ஆக்கங்களை 0777895716 எனும் வாட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு சைவபரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-41)

## கல்முனை வடக்குப் பிரதேச செயலகம்

# அரசியல் தலையீடுகளால் செயற்படாமல் முடக்கம்!


## சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார் எம்.பி.

யாழ்ப்பாணம்,மார்ச் 11

அரசியல் காரணங்களால் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை முழுமையாகச் செயற்படுத்தமுடியாத வகையில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் நாடாளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றுகையில் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது-

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்துக்கு ஒரு கணக்காளர் இல்லாமைக்கு அரசியல் தலையீடே காரணமாக அமைந்துள்ளது. இதனால், செயலகத்தின் பல பகுதிகள் செயற்படமுடியாமல் உள்ளன. படிப்படியாகக் கல்முனை தெற்குப் பிரதேச செயலகத்திற்கு மாற்றுவதற்கு தற்போது முயற்சிகள் நடைபெறுகின்றன. கடந்த அரசாங்கத்தில் இதனை உப அலுவலகமாகத் தரம் இறக்கப் போவதாகப் பேச்சுக்கள் இடம்பெற்றன. இந்த அரசாங்கத்தின் ஆட்சியிலாவது அவ்வாறு தரம் இறக்கும் செயற்பாட்டை நிறுத்தவேண்டும் . 1989 இல் எடுக்கப்பட்ட முடிவு இது. அரசியல் தலையீடு காரணமாக இந்தப் பிரச்சினை நீடித்துவருகிறது. கடந்தகாலங்களில் நடைபெற்றிருந்த அரசியல் தலையீட்டை இந்த அரசாங்கம் அனுமதிக்கப்போவதில்லை என்றால் [illegible] தைச் செய்யவேண்டும். இந்த விடயத்துக்கு எமது [illegible] ழைப்பை வழங்குவோம் என்றார். (அ-33-66)



# யாழ்.மாவட்டச் செயலகத்தில் சர்வதேச மகளிர்தின நிகழ்வு

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, யாழ். மாவட்டச் செயலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், சர்வதேச மகளிர் தின நிகழ்வு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் [illegible] நடைபெற்றது. [illegible] செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் , சிறப்பு விருந்தினர்களாக கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ-25-27-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்றில் நாய்கள்; பாய்கிறார் சபாநாயகர்



கொழும்பு, மார்ச் 11
நாடாளுமன்ற வளாகத்துக்குள் சுற்றித்திரியும் நாய்களை அகற்றுமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, படைக்கலச் சேவிதர் குஷான் ஜயரத்னவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்துக்குள் பத்துக்கும் மேற்பட்ட நாய்கள் சுற்றித்திரிவது கண்டறியப்பட்டுள்ளது. இவை நாடாளுமன்ற ஊழியர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் தொந்தரவாக உள்ளன. நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள கட்டடங்களை ஆய்வு செய்ய நேற்று முன்தினம் சென்றபோது, சபாநாயகரும் தொந்தரவுக்குள்ளானார் என்றும் நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனையடுத்தே நாடாளுமன்ற வளாகத்தில் சுற்றித்திரியும் நாய்களை வெளியேற்ற சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

# பட்டலந்த விசாரணை அறிக்கை; நாடாளுமன்றில் சமர்ப்பிக்குக!

### துமிந்த நாகமுவ கோரிக்கை

கொழும்பு,மார்ச் 11
**பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும், அவரது குடியுரிமையை இரத்துச்செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கம் பட்டலந்த அறிக்கையை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அல் ஜெசீரா ஊடகவியலாளர் பட்டலந்த அறிக்கையைக் காண்பித்தபோது 'அந்த அறிக்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டதா?' என்று ரணில் மீண்டும் கேட்கிறார். அவ்வாறாயின் பட்டலந்த விவகாரம் அரச நிறுவனக் கட்டமைப்புக்குள் இதுவரையில் பிரவேசிக்கவில்லை என ரணில் விக்கிரமசிங்க கருதுகிறார். பட்டலந்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு அப்போதைய ஜனாதிபதியால் விசேட குழு நியமிக்கப்பட்டதுடன் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் அறிக்கை இதுவரை காலமும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு, ரணில் விக்கிரம சிங்கவின் அரசியல் எதிர்காலத்தை பாதுகாக்கவேண்டிய தேவை இருந்தது. அதனால் அவர் அந்த அறிக்கையை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவில்லை. ஆகவே இந்த அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து நியாயத்தை வழங்கும் வாய்ப்பு இந்த அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது என்றார். (அ-33-இ)

## மாசிமக உற்சவம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயத்தில் மாசிமக உற்சவம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. கண்ணகி அம்மனுக்கு நவ கும்ப அபிஷேகமும் நடேசர் அபிஷேகமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

## அரச இலக்கிய விருது விண்ணப்பம் கோரல்

எழுத்தாளர்கள் மற்றும் நூல் வெளியீட்டாளர்களிடமிருந்து வருடாந்த அரச இலக்கிய விருது வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கடந்த வருடம் பிரசுரிக்கப்பட்ட 49 பக்கங்களுக்குக் குறையாத நூல்கள் விருதுக்குத் தெரிவுசெய்யப்படவுள்ளன. அச்சிடப்பட்ட நூலின் 3 பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மொழிபெயர்ப்பு நூல்களாயின் அவற்றின் மூலப்பிரதியையும் அனுப்பவேண்டும்.

அவற்றை அரச இலக்கிய ஆலோசனைக்குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ கிடைக்கச் செய்யலாம். விண்ணப்பங்களை தத்தமது பிரதேச செயலக கலாசார அலகில் பெற்று நிரப்பி தமது நூலின் பிரதிகளையும் இணைத்து, ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-25-9)

## திருவாசகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 11
சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்- 48, தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சைவப்புலவர் செ.த.குமரன் "மாணிக்கவாசகரும் பண்டாய நான்மறையும்" எனும் விடயப் பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ-25)

## 6 பொலிஸ் குழுக்களுக்கும் தென்னக்கோன் 'டிமிக்கி'

கொழும்பு,மார்ச் 11
முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்வதற்காக ஆறு பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்ட போதும், அவரை 10 நாள்களுக்கும் மேலாக கைதுசெய்யமுடியாமல் பொலிஸார் திணறுகின்றனர் என்று கூறப்படுகிறது.

தேசபந்து தென்னக்கோனை கைது செய்ய மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த மாதம் 28ஆம் திகதி பிடியாணை பிறப்பித்திருந்தது. 2023 டிசெம்பர் 31ஆம் திகதி அன்று மாத்தறை வெலிகமப் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணையின்போது, தென்னக்கோனைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, தேசபந்து தென்னக்கோன் முக்கியமான அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் மறைந்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என முன்னாள் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-33-இ)

## சிங்கமலையில் காட்டுத் தீ

சிங்கமலைக் காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட தீயால் பல ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வனப்பரப்பு அழிவுக்கு உள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இனந்தெரியாத விசமிகள் வனத்துக்கு தீ வைத்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இந்தக் காட்டுத் தீயால் அரியவகைத் தாவரங்கள், மருத்துவ மூலிகைகள், உயிரினங்கள் அழிந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. அதேவேளை, இந்தப் பகுதியிலேயே ஹட்டன் பிரதேசத்துக்கான நீர் மூலம் உள்ளதால், அவை வற்றியிருக்கலாம் என்றும், அதனால் எதிர்காலத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



## 2 துப்பாக்கிகளுடன் 2 நபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 11
மஹவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லியனகமப் பிரதேசத்தில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-25,இ)

### சுற்றாடல் பாதுகாப்புக் கூட்டத்திலிருந்து

## ஊடகர்களை வெளியேற்றிய யாழ். பதில் மாவட்டச் செயலர்!

யாழ்ப்பாணம், மார்ச் 11
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்டச் சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இருந்து ஊடகவியலாளர்களை யாழ்ப்பாணம் பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் வெளியேற்றிய சம்பவம் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்தவாரம் நடைபெற்ற, மாவட்ட சுற்றாடல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்துக்கு ஊடகவியலாளர்களுக்கு அன்று காலையே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள இரு ஊடகவியலாளர்கள் சென்றபோது, 'நீங்கள் இருந்தால் அதிகாரிகள் பேச மாட்டார்கள்' என்று தெரிவித்து அவர்களை வெளியேற்றியுள்ளார் பதில் மாவட்டச் செயலர்.

அதேவேளை, மற்றுமொரு ஊடகவியலாளர் அதே கூட்டத்தில் கலந்துகொள்ள பதில் மாவட்டச் செயலர் அனுமதி வழங்கினார் என்றும் தெரியவருகின்றது. (அ-25)


## வேட்டையாடிகள் அறுவர் கைது

விலங்குகளை வேட்டையாடிய குற்றச்சாட்டில் போரதனைப் பொலிஸாரால் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யஹலதென்ன பிரதேசத்தில் விலங்குகளை வேட்டையாடுகின்றனர் என்று பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமையவே இந்தச் சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 02 . 1939



மறைவு 10 . 03 . 2025

## கிறிஸ்தோ அகுஸ்தீன் (சின்னமணி)

நவாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோ அகுஸ்தீன் (சின்னமணி) நேற்று (10.03.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தவமணி அவர்களின் அன்புக் கணவரும், யூடிற்றா (நோர்வே), யூலியானா (லண்டன்), யுதாசன் (கனடா), யூஜினா ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பராஜன், தவராஜன், தேவராஜன், ரோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் ராசமணி, ருக்குமணி, கமலா, அருளம்மா, செல்வராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெரோன், ஜெறிக்சன், யோனாஸ், மிறோன், மிறோனா, விறோனா, நியோமி, செருபா, எரிக்சன், ஸ்ரெபான், லியானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கஆராதனை இன்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 03.30 மணியளவில் நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம்பெற்று பின்னர் சென்பீற்றஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(CS/57714) J-1

தகவல்:
குடும்பத்தினர்

# முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் சிக்கலுக்குத் தீர்வு

## அரசிடம் வலியுறுத்தினார் ரவிகரன் எம்.பி.

கொழும்பு, மார்ச் 11

முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினைக்குத் தீர்வு தேவை. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க மகளிர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பு அவசியம் என்று தெரிவித்துள்ளார் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன். நாடாளுமன்றில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முன்பள்ளிகளில் மிகவும் குறைந்த சம்பளத்தில் ஆசிரியர்களாக மகளிரே கடமையாற்றுகின்றார்கள். அவர்களுக்கு ஒரு மாதக் கொடுப்பனவு வெறும் 6 ஆயிரம் ரூபா மட்டுமேயாகும். இது தொடர்பில் பலரும் என்னிடம் முறையிட்டுள்ளார்கள்.

முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கு மகளிர் விவகார அமைச்சரும் தம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களின் ஒப்பற்ற சேவைக்குரிய கொடுப்பனவு போதுமானதா? இந்த விடயத்தில் அரசு கவனம் செலுத்தவேண்டும் என்றார். (எ-41)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்
077 334 1281

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
## ஏலவிற்பனை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்திற்கு விற்கப்படவுள்ளன

காலம் : 18.03.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி

**இடம் : தலைமை அலுவலகம், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

**பொருட்கள் விபரம்**

இலத்திரனியல் பொருட்கள், வாகன பற்றிகள், உலோகப் பொருட்கள், மின்னியல் பொருட்கள், தளபாடப் பொருட்கள், பழைய மரங்கள், வாகன பழைய பொருட்கள், ரயர்கள் மற்றும் வெற்று தார் பரல்கள்


**நிபந்தனைகள்**

01. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும் மு.ப. 10.00 க்கு பின்னர் ஏலதாரர் பதிவுகள் மேற்கொள்ளப்படாது.
02. சித்தியடைந்த ஏலத்தாரர் ஒப்புக்கொண்ட ஏலத்தொகை முழுவதையும் செலுத்திப் பொருட்களை அன்றைய தினமே அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 0212240017

**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
11.03.2025

(CR/44537) J-1

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 15.03.1939    மறைவு : 11.03.2009

## அமரர் உயர்திரு. வயிரமுத்து குலசிங்கம்

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை)

எங்கள் குடும்பத்திற்கு ஒளி விளக்காய் இருந்து எம்மை நல்வழிப் படுத்திய அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாதையா!


Mrs.S.Kulasingam
London.
11.03.2025

உங்கள் பிரிவால்
ஏங்கி நிற்கின்றோம்
மனைவி, மருமக்கள்,
பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனிமார்.

(cs.29919) (N-1)

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 03 . 1990



மறைவு 08 . 03 . 2025

## கந்தசாமி அர்ஜீத் (குட்டி)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அர்ஜீத் (குட்டி) கடந்த 08.03.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் - செல்வரஞ்சினி தம்பதியின் மூன்றாவது மகனும், காலஞ்சென்ற அரச்சுனன் மற்றும் - கோகிலா தம்பதியின் அன்பு மருமகனும், நயோமி நிறைஞ்சலா அவர்களின் அன்புக் கணவரும், கார்த்தீபன், அர்ஜின், ஆரணி, அனுசியன், தீபநாத் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனுஷ், அரவிந்தன், ஜெயவாணன், ராஜவாணி, கவுஷிகா, ஆர்த்திகா ஆகியோரின் மைத்துனரும், ஸஸ்மிதன், விபிஸ்டன், அஸ்ரி, ரிஷ்வந், ரஷ்னியா, ஸஸ்விந், ஆதிரா ஆகியோரின் சிறியதந்தையும், சாதனா, ஆரணன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாவிட்டபுரம்.

(CS/57715) J-1

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட

# பொருளாதார மத்திய நிலையத்துக்கு மாற்றுத்திட்டம் செயற்படுத்த முடிவு

**யாழ்ப்பாணம், மார்ச் 11**

**2018ஆம் ஆண்டு சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்துக்கு மாற்றுத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. இந்த பொருளாதார மத்திய நிலையம் நீண்டகாலமாக செயற்படாமல் காணப்படும் நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

இந்தப் பகுதியில் சாதகமான வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக எதிர்வரும் 29ஆம் திகதி யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் இ.சந்திரசேகரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலர் ஆகியோர் உள்ளடங்கலாக விசேட கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார மத்திய நிலையம் செயற்பாடற்று இருப்பது தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, சாவகச்சேரி பிரதேச செயலரிடம் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்த பதில் மாவட்டச் செயலரும், பிரதேச செயலரும் அந்தப் பகுதியில் போக்குவரத்து மிகவும் குறைவாக உள்ளது. அதனால் மாற்றுத் திட்டம் ஒன்றைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்தனர்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, வடக்கு, கிழக்கில் கைத்தொழில் பேட்டைகளுக்காகப் பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நாம். அங்கே தோல் உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்கமுடியும். அதன்மூலம் அதிகளவு வெளிநாட்டு வருமானத்தை ஈட்ட முடியும். சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மற்றும் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை என்பவற்றுக்கு 9.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளேன். அந்த நிதி வரைமுறைகளுக்கு ஏற்ப பயன்படுத்த முடியாத சூழல் ஏற்படுமாயின் அதை இந்தத் தொழிற்சாலைக்கு வழங்குகின்றேன் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பதில் மாவட்டச் செயலர், இது சிறந்த திட்டம். வர்த்தக அமைச்சிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளமுடியும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருடனும் இணைந்து எதிர்வரும் 29ஆம் திகதி கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்வதன் ஊடாக சிறந்ததிட்டம் ஒன்றை முன்னெடுக்க முடியும் என்றார்.

(எ-41-125)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 581/84 எனும் ஆதனம் பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்காரர் என பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் P/02 வழக்கு இலக்கத்தில் பிரிவிடுதல் வழக்கு இறுதித்தீர்வையாக செல்வநாயகம் அந்தோனி அல்ரன் மதுரஇன்னேசியஸ் யுவக்கியாம்பிள்ளை டொமினிக்கும் இன்னும் 9பேரும் பிரிவிடுதல் உறுதி மூலம் யுவக்கியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் இற்கு வழங்கியுள்ளர்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைச் சேர்ந்த யுவக்கியாம்பிள்ளை டொமினிக் அல்லது யுவக்கியாம்பிள்ளை அருள்நாயகம் டொமினிக் என்பவர் யாழ் நொத்தாரிசு A.மரியாம்பிள்ளை முகதாவில் 1979.03.19 ம் திகதி 412ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறையில் "அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறு பிரிவுகளும்" என்னும் பெயருடைய விஸ்தீரணம் நிலப்பரப்பு 540 கொண்ட ஆதனத்தை குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சவரிமுத்து கிறிஸ்தோபரும் பெண் கெலனுக்கும் அறுதி விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை பின்னர் குருநகர் மத்தியகிழக்கு வீதியைச் சேர்ந்த திருமதி றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என்பவர் நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 2004.01.15 ம் திகதி 2015ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சவிரிமுத்து கிறிஸ்தோபர் காலமடைந்ததன் பின்னர் ஏகவாரிசான எனக்கடைந்த பிதாவழி முதுசமும் உரித்தும் எனதாட்சியுமானது என வெளிப் படுத்தியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனம் றிச்சேட் கான்ஸ்போவர் அவரது அற்றோணி தத்துவக்காரர் திருமதி எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் என்பவர் மூலம் நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 2014.10.27 ம் திகதி 2213ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் சாந்தகுமார் கிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவிற்கு நன்கொடையாக கையளித்துள்ளார்.

அதன் பின்னர் குறித்த ஆதனம் சாந்தகுமார் நிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவும் சேர்ந்து நொத்தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் 16.09.2015ம் திகதி 192ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி விக்ரோரஸ்க்கும் இம்மனுவேல் ஜேற்றுட் அமலசீலிக்கும் அறுதி விற்றுள்ளார்கள்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை, **"அமரக்கோன் முதலியார் காட்டுத்தலைமடையும் மறுபிரிவுகளும்"** என்று வழங்கும் **"கொழும்புத்துறைத் தெருத்தோட்டம்"** நிலப்பரப்பு முன்னூற்றி எழுபத்தி ஐந்து (நிலபர.375) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 12.03.2012 இல் 1 தொடக்கம் 10 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு முன்னூற்றி எழுபத்தியாறு குளி பன்னிரண்டு தசம் எட்டு (நில.பர. 376 குளி 12.8) இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு இருநூற்றி இருபத்திரண்டு குளி மூன்று தசம் ஒன்பது இரண்டு (நில.பர. 222 குளி 3.92) இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 05.12.2014 இல் 6088A/14ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி துண்டு 24 (Lot 24) என சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்றும் (நில.பர 01) துண்டு 39(Lot 39) என சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்றும் (நில.பர.01) இவ்விரண்டு துண்டுகளும் ஒன்று சேர்த்து நிலப்பரப்பு இரண்டு (நில.பர 02) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபையால் 21.12.2014 இல் 6088A - 24/14ம் இலக்கத்திலும் 6088A - 39/14ம் இலக்கத்திலும் அளந்த நில அளவைப்படங்களில் முறையே துண்டு 1 (Lot 1) எனச் சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு இரண்டிற்கும் எல்லை:

கிழக்கு :- குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 25 உம் துண்டு 38 எனக் காட்டப்பட்ட ஆதனங்கள்
வடக்கு :- ஆறு மீற்றர் அகலப்பாதை
மேற்கு :- ஆறு மீற்றர் அகலப்பாதை
தெற்கு :- ஆறு மீற்றர் அகலப்பாதை

இதடங்கலும் இன்னும் இவ்வாதனத்திற்கு வடக்கேயும், மேற்கேயும், தெற்கேயும் உள்ள 6 மீற்றர் அகலமுள்ள பாதைகளால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும்.

இவ்வாதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குள் வருவதுடன் யாழ்பாண பிரதேச செயலகம் J/61 கிராம சேவையாளர் பிரிவிலும் அமைந்துள்ளது.

தற்போது இவ்வாதனத்தை விக்ரோரஸ் உம் இம்மனுவேல் ஜேற்றுட் அமலசீலி என்பவர்கள் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது விக்ரோரஸ் உம் இம்மனுவேல் ஜேற்றுட் அமலசீலி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகரசபை**

(CR 44538) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 05 . 1978
மறைவு 09 . 03 . 2025

### பாலகிருஷ்ணன் தணிகைவேள்

திக்கத்தைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி வீதி வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் தணிகைவேள் அவர்கள் நேற்று முன்தினம் (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன் - நாகேஸ்வரி தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கராஜ் வைரமுத்து) - பாக்கியலட்சுமி தம்பதியின் அன்பு மருமகனும் மற்றும் ஜனாதனா அவர்களின் அன்புக் கணவரும், தேஸ்னா, ரோகித் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றில்குசா (லண்டன்), சந்திரலதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரவிதாஸ் (லண்டன்), சிவகுமார் (லண்டன்), பாலாம்பிகை யசோதாம்பிகை (ஜேர்மனி), சுபாம்பிகை, யோகாம்பிகை (டென்மார்க்), சிவராமன் (ஜேர்மனி), செந்தில்வேல் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், முருகுப்பிள்ளை (கந்தசாமி), வேலும்மயிலும் ஆகியோரின் மருமகனும் ஸ்ரீன் (லண்டன்), ஷோபிதா (லண்டன்), அஸ்மிதா (லண்டன்), அர்ச்சனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் உடுப்பிட்டி வீதி வதிரியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து நெல்லியடி மத்திய கல்லூரி மற்றும் திக்கம் சனசமூக நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
0044 791 839 7307
0094 753 333 398

(CR/44543) J-1

## பொதுமக்கள் கருத்தறிதல்

வருடாந்தம் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா தொடர்பாக மாநகரசபையால் வழமை போன்று முன்னெடுக்கப்படும் போக்குவரத்து ஒழுங்குகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், சுகாதார மருத்துவச் செயற்பாடுகள், உள்நுழைவு அனுமதி வழங்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்கு நல்லூர் ஆலயச் சூழலில் வீதித் தடைப் பகுதிக்குள் வசிக்கும் நிரந்தர குடியிருப்பாளர்கள், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றி தமது கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

- **இடம் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கேட்போர் கூடம், யாழ். மாநகரசபை.**
- **காலம் : 2025.03.16 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் : பிற்பகல் 3.00 மணி**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(cr 44540) (N-1)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



இல.14, சபாபதி வீதி, பூநாரிமரத்தடி
கொக்குவில் யாழ்ப்பாணம்

**கடந்த 22.02.2025 சனிக்கிழமை**
**இறைபதமடைந்த**
**எமது குடும்பத்தலைவர்**

### அமரர் அம்பலம் இரவீந்திரதாசன்
**(சமாதான நீதவான்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (09.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

**குடும்பத்தினர்.**

(CS 2700) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் அழுத்த நோய் விழிப்பூட்டல் நடைபவனி

யாழ்ப்பாணம், மார்ச் 11

உலக கண் அழுத்த நோய் வாரத்தை முன்னிட்டு, கண் அழுத்த நோயிலிருந்து விடுபடுவது தொடர்பான விழிப்புணர்வு நடைபயணம், எஸ்.ரி.எஸ்.தனியார் மருத்துவமனையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. இந்த நடைபயணமானது நாளை மறுதினம் 13 ஆம் திகதி காலை 7 மணிக்கு வண்ணார்ப்பண்ணை சிவன் கோவிலடியில் ஆரம்பித்து எஸ்.ரி.எஸ். தனியார் மருத்துவமனை முன்றலில் நிறைவுபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

# கொழும்பு மேயராக களமிறங்கும் எரான்?

கொழும்பு, மார்ச் 11

பொருளாதார நிபுணரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எரான் விக்ரமரத்னவை கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளராக களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது என அறியமுடிகின்றது.

இது தொடர்பான அதிகார பூர்வ அறிவிப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு மேயர் வேட்பாளராக ஹிருணிகாவை களமிறக்குவது தொடர்பாக ஆராயப்பட்டாலும் அவர், கடுவலைத் தொகுதியை விட்டு வரப்போவதில்லை என தெரியப்படுத்தியுள்ளார். அதேபோல மேயர் வேட்பாளராக களமிறங்குவதற்காக இம்முறையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறப்பதற்கு தயாரில்லை என முஜிபூர் ரஹ்மானும் தெரிவித்துள்ளார். அதையடுத்தே எரான் விக்கிரமரத்னவை களமிறக்குவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (எ-44)

## சுகாதார...

அமைச்சர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

சுகாதார மற்றும் மருந்து விநியோகம் என்பன இந்தநாட்டு மக்களின் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய துறைகளாக உள்ளன. ஆதலால் அந்தத் துறைகள் வீழ்ச்சியடைவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எனவே, சுகாதார உறுதிப்பாட்டையும், மருத்து விநியோகத்தையும் உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மருந்துகளுக்கு நிலவிவரும் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க தற்போதைய அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அரச மருத்துவமனைகளுக்கு சீரான வகையில் மருந்துகள் அனுப்பிவைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வரலாற்றில் சுகாதாரத் துறைக்காக, இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்திலேயே மிகப்பெரிய தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை முறையாகவும் திட்டமிட்ட முறையிலும் பயன்படுத்தி, வினைத்திறனான வகையில் சுகாதாரக் கட்டமைப்பு மேம்படுத்தப்படும்-என்றார். (அ .மஇ)


## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## கரைச்சி பிரதேச சபை வளாக கடைத்தொகுதி (மேல்த்தளம்), ஆனையிறவு வணிக சுற்றுலா மைய வணிக கடைத்தொகுதி, ஸ்கந்தபுரம் சந்தை மற்றும் ஆனைவிழுந்தான் குளம் சந்தையில் அமைந்துள்ள கடைகளினை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரல்

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2025.03.11 தொடக்கம் 2025.03.24 ம் திகதி வரை
மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி :- 2025.03.25 ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 2025.03.25 ம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கரைச்சி பிரதேசசபை, தலைமை அலுவலகம்.

கரைச்சி பிரதேச சபை வளாக கடைத்தொகுதியிலுள்ள கடைகளுக்கான கேள்வி அட்டவணை (மேல்த்தளம்)

| இல | விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடைஇல 01 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,880,000.00 |
| 02 | கடைஇல 02 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,880,000.00 |
| 03 | கடைஇல 03 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,880,000.00 |
| 04 | கடைஇல 04 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,880,000.00 |

ஸ்கந்தபுரம் கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல | விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 33 | 4,000.00 | 1,000.00 | 10,000.00 | 960,000.00 |
| 02 | கடை இல 34 | 4,000.00 | 1,000.00 | 10,000.00 | 960,000.00 |
| 03 | கடை இல 35 | 5,000.00 | 1,000.00 | 12,000.00 | 1,200,000.00 |
| 04 | கடை இல 36 | 5,000.00 | 1,000.00 | 12,000.00 | 1,200,000.00 |

ஆனைவிழுந்தான்குளம் சந்தை கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல | விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 01 | 3,350.00 | 1,000.00 | 10,000.00 | 804,000.00 |
| 02 | கடை இல 02 | 3,350.00 | 1,000.00 | 10,000.00 | 804,000.00 |

ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தில் அமைந்துள்ள கடைகளுக்கான கேள்வி அட்டவணை

| இல | விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 02 | கடை இல 02 | 2,500.00 | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 04 | கடை இல 05 | 2,500.00 | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |

நிபந்தனைகள்:

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் கரைச்சி பிரதேசசபையின் ஆளுகை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
02. கரைச்சி பிரதேச சபையினால் ஏற்கனவே கேள்வி கோரப்பட்ட கேள்விகள் மூலம் நீண்டகால குத்தகைதாரராக தெரிவு செய்யப்பட்டவர்கள் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச்சந்தைகளில் நிரந்தர கடைகளினை வாடகைக்கு பெற்றவர்கள் எவரும் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதுடன் அவ்வாறு தவறுதலாக விண்ணப்பித்திருப்பின் அவருடைய கேள்விப்பத்திரமானது சபையினால் எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
03. கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான அரை நிரந்தர, தற்காலிக கடைகளினை வாடகைக்கு நடத்துபவர்கள் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியுமாயினும் அவர்கள் கேள்வி கோரலில் சித்திகர குத்தகைதாரராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் ஏற்கனவே வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளினை சபைக்கு மீள கையளிப்புச்செய்தல் கட்டாயமானதாகும்.
04. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் வதிவிடம் மற்றும் ஆள் அடையாளம் ஆகியவற்றை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் குடும்ப அட்டை பிரதி என்பவற்றுடன் நேரடியாக கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சிக்கு சமுகமளித்தல் வேண்டும்.
05. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 2025.03.25 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2025.03.25 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
06. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவரும் கேள்விப்பத்திரங்கள் விண்ணப்பிக்க முடியாது. எனினும் அவர்களுக்கு கேள்விப் பத்திரங்கள் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
07. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
08. ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களில் ஒருவர் மட்டுமே தனது பெயரில் கேள்வி விண்ணப்பங்களை விண்ணப்பக்க முடியும். ( குடும்பம் என கருதப்படுவது இங்கு கணவன், மனைவி மற்றும் திருமணமாகாத பிள்ளைகளை குறிக்கும்) மற்றும் குறித்த அந்நபர் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணபங்களை விண்ணப்பிக்க முடியுமாயினும் ஒரு கடைக்கு மாத்திரமே வாடகை ஒப்பந்தத்தினை மேற்கொள்ள முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கடைத் தெரிவானது கேள்விச்சபையினாலேயே தீர்மானிக்கப்படும்.
09. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படும்.
10. சித்திகரக் குத்தகைதாரர் அறிவித்தல் கிடைத்து ஏழு நாட்களுக்குள் கேள்வி சமர்ப்பித்த முழுத்தொகை (ஒரே தடவையில் கோரிப் பெறும் பணம் - KEY MONEY) ஐயும் மூன்று மாதகால முற்பண வாடகையினையும் செலுத்தி ஒப்பந்தம் ஒன்றை செய்தல் வேண்டும். இதில் ஒரே தடவையில் கோரிப் பெறும் பணம் (KEY MONEY) எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படமாட்டாது.
11. முற்குறிப்பிட்ட 09, 10 ஆவது நிபந்தனைகளின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து கேள்விகள் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன், அவஉகளது பெயஉ தவறுனர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
12. குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னஉ மாதாந்த கடை வாடகையாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்துவதற்கு உடன்படுவதுடன் மாத வாடகைப் பணத்தினை குறித்த மாதத்தின் இறுதி வேலைநாளுக்குள் செலுத்துவதற்கும் உடன்படவேண்டும். தவறின் அதன் பின்னர் 10 நாட்களுக்குட்பட்டு செலுத்தும் பட்சத்தில் மாத வாடகையின் 10% தண்டப்பணத்தினையும் காலதாமதம் 10 நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் 15% தண்டப்பணத்தினையும் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
13. கடையை வாடகைக்கு எடுப்பவரினாலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது கணவன் / மனைவி / வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம்:- மகன்,மகள்).
14. சபையின் அனுமதியின்றி எதுவித வியாபார நிலையத்தினுள் எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
15. தெரிவுசெய்யப்படாத கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.
16. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
17. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
18. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரியினை / உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வரிச் சான்றிதழினை / உரிமத்தினை பெற்றுக் கொள்ள வேண்டும்.
19. குறித்த குத்தகை நிலையத்திற்கான ஏனைய இதர வசதிகளுக்கான கட்டணங்கள் ( மின்சாரக்கட்டணம் உட்பட) அனைத்தும் குத்தகைதாரராலேயே செலுத்தப்பட வேண்டும்.
20. சித்திகர குத்தகைதாரர் கரைச்சி பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
21. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
22. சபையின் செயலாளரின் இந்த நிபந்தனைகள் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் செயலாளரிற்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
23. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. செ.செல்வகுமார்
செயலாளர்,
கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.

திகதி :- 11/03/2025

(CR/44539) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்...

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பிரதமர் ஹரிணி மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது ஆசிரியர் சேவையில் இருக்கின்ற ஆசிரியர் வளத்துக்கு அப்பாற்பட்டு கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் உள்ள பீடங்கள் ஊடாக பயிற்சி பெறுகின்ற ஆசிரியர்கள் தொடர்பாக நாங்கள் கவனம் செலுத்தியிருக்கின்றோம்.

கல்வியியற் கல்லூரிகள் இருக்கின்ற நிலையைப் பார்க்கும்போது கவலையாக உள்ளது. பொலநறுவை, யாழ்ப்பாணம்போன்ற கல்வியற் கல்லூரிகளைப் பார்வையிடச் சென்றேன். எதிர்காலத்தில் ஆசிரியர்களாக வரக்கூடிய அங்கிருக்கின்ற மாணவர்கள் எந்த வசதியும் இல்லாமல் இருக்கின்றனர். சரியான விடுதி வசதிகள் இல்லை, குடிநீர் வசதிகள் இல்லை.

பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் பற்றிக் கதைக்கின்றோம். படிப்பிக்கக் கூடிய ஆசிரியர்களுக்கு இன்னமும் கரும்பலகை மாத்திரமே இருக்கின்றது. சரியான மின்சார வசதிகள் இல்லை, உட்கட்டுமான வசதிகள் இல்லை. இவ்வாறான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக 11 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம். விரைவில் நாங்கள் கல்விக் கட்டமைப்பை மேம்படுத்துவோம் என்றார். (அ-ம-இ)

## வவுனியாவில்...

செலுத்தமுடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகரசபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதன் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் தனித்துப் போட்டியிடவுள்ளது. அதற்கான கட்டுப்பணத்தை கட்சியின் மாவட்டக் கிளையினர் நேற்றுச் செலுத்தியுள்ளனர். (அ-ம-18)

## பொலிஸ்...

பேசி வழக்குகளை முடிப்பதாகக் கூறி பணம் பெற்று வந்தமை தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவந்த நிலையில், அந்த நபர் தற்போது தலைமறைவாகி உள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்த நிலையில், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துமாறு மன்று பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளது.

அதேவேளை சந்தேகநபரின் தந்தையான பொலிஸ் அதிகாரி முல்லைத்தீவுப் பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வலையொளிப்...

புடைய மேலும் மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வறியவர்களுக்கு உதவுதல், பெண் தலைமைக் குடும்பங்களுக்கு உதவுதல் என்ற பெயரில் அவர்களின் வீடுகளுக்குள் அத்துமீறிச் செயற்பட்டமைக்காக குறித்த நபர்கள், இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். இதையடுத்தே அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26-125-27-20)

## கலைப்...

காட்டல் அலகின் உதவியுடனும் 'சேவ் ஏ லைவ்' அமைப்பின் அனுசரணையுடனும் கலைப்பீடத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு இந்தத் தொழிற்சந்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடக்கவிழாவில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார். நிகழ்வில், கலைப்பீடத்தில் நான்காம் வருடம் மற்றும் மூன்றாம் வருட சிறப்புக்கலை மற்றும் பொதுக் கலை பயிலும் மாணவர்களும், யாழ். பல்கலைக்கழகத்தில் சிறப்புக்கலை, பொதுக்கலைப் பட்டங்கள் பெற்று, வேலைவாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் பட்டதாரிகளும் நேரடிப் பயனாளிகளாக இணைந்துகொள்ளலாம்.

அறுபதுக்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்கும் தொழிற்சந்தையில் அரச திணைக்களங்கள், சபைகள், தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள், விருந்தோம்பல் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் பாடசாலைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்துறையினர் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-25)

## மேன்முறையீட்டு...

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நீதிவான், மாவட்ட நீதிபதி மற்றும் மேல் நீதிமன்ற நீதிபதியாக அன்னலிங்கம் பிரேமசங்கர் சுமார் 28 ஆண்டுகள் நீதிச்சேவையில் கடமையாற்றியுள்ளார்.

துன்னாலை அமெரிக்க மிசன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அன்னலிங்கம் பிரேமசங்கர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்து சட்டத்துறையில் கல்விகற்று சட்டத்தரணியானார்.

1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நீதித்துறை அலுவலராக நீதிபதி நியமனம்பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிமன்றங்களில் ஒரேதடவையில் நீதிவானாகவும் (போர் இடம்பெற்ற காலப்பகுதியில்) மல்லாகம், சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்து நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

சுமார் 14 ஆண்டுகள் நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்த அன்னலிங்கம் பிரேமசங்கர் 2012ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராக (மேல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை நாடாளுமன்றினால் அதிகரிக்க முன்னர்) பின்னர் 2013ஆம் ஆண்டு ஜூலை 01ஆம் திகதி தொடக்கம் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற ஆணையாளராகப் பதவி வகித்ததுடன் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி முதல் மேல் நீதிமன்ற நீதிபதியாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டு யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு என மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகவும் சுமார் 13 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார்.

இந்த நிலையில் 27 ஆண்டுகள் நீதிச் சேவையில் முதல் நிலை நீதிபதியாகத் தொடர்ந்த நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், தலைமை நீதியரசர் முருது பெர்னான்டோ தலைமையிலான நீதிச் சேவை ஆணைக்குழுவின் பரிந்துரையுடனும் சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்புச் சபையின் ஒப்புதலுடனும் ஜனாதிபதியினால் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்படுகிறார்.

2000ஆம் ஆண்டு பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சி நீதிவானாகச் செயற்பட்ட காலத்தில் மிருசுவிலில் ஐந்து வயது சிறுவன் உட்பட எட்டுப் பேரை சுட்டுப் படுகொலை செய்த வழக்கின் விசாரணைகளை உரியவகையில் முன்னெடுத்தமைக்காக அந்த வழக்கின் தூக்குத் தண்டனை பெற்ற இராணுவச் சிப்பாயின் மேன்முறையீட்டை விசாரணை செய்து தூக்குத் தண்டனையை உறுதிசெய்த தீர்ப்பில் உயர் நீதிமன்ற அமர்வு நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கருக்கு பாராட்டை கோடிட்டுக்காட்டியிருந்தது. (அ-ம-26-125)

## நான்கு...

உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளரும், ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளருமான டானியல் வசந்தன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேசசபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணமே இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளது. (அ-ம-56)

## யாழ்ப்பாணத்தில்...

சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:- ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் வடக்குக் கிழக்கில் உள்ள அனைத்து சபைகளிலும் போட்டியிடவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சமத்துவக்கட்சி, ஜனநாயகத் தமிழரசுக் கட்சி ஆகிய தரப்புகளுடன் இணைந்து போட்டியிட உள்ளோம். ஏனைய இடங்களில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக அதன் அங்கத்துவக் கட்சிகள் இணைந்து போட்டியிடவுள்ளன. அதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறோம். ஒட்டுமொத்தமாக ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அனைத்து சபைகளிலும் போட்டியிடும்.

மன்னார் பிரதேச சபைக்கான தேர்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் இடம் பெறும் வழக்கு விசாரணை மீளப்பெற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அதற்கான தேர்தல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது. எனவே மன்னார் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடவும் நாங்கள் தயாராக உள்ளோம்.

அண்மையில் 9 கட்சிகள் இணைந்து ஒரு கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. எனினும் 9 கட்சிகளும் இணைந்துள்ளோம் என்று தெரிவிக்கவில்லை. 9 கட்சிகளும் இணைந்து கலந்துரையாடலை மாத்திரமே முன்னெடுத்தோம். எமது கூட்டணி யாழ்ப்பாணத்தில் மாத்திரமே அமைய இருக்கின்றது. நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரனின் கட்சி தனித்துப் போட்டியிட உள்ளது. ஐங்கரநேசனின் கட்சி தனித்துப் போட்டியிடுகின்றதா? இல்லையா? என்று தெரியவில்லை. எனினும் இந்த அணியில் இருந்து விலகி உள்ளதாக அறிவித்துள்ளார். ஆதலால், உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் கூட்டணியாகவும், ஏனைய இடங்களில் அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்தும் தேர்தலை எதிர்கொள்வது என்பதே எங்களின் முடிவாக உள்ளது - என்றார். (அ-ம-56)

## வடமாகாணத்தில்...

வடமாகாணத்தில் தற்போது 3 ஆயிரத்து 557 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் 18 ஆயிரத்து 983 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்ட நிலையில், தற்போது 15 ஆயிரத்து 426 பேரே பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் தற்போது 3 ஆயிரத்து 557 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவை விரைவில் நிரப்பப்படவேண்டும். வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாவது வாசிப்பின் போதான எனது உரையில் வடக்கு மாகாணத்தில் சிவில் பாதுகாப்புத் துறையினர் முன்பள்ளி களை நடத்துவது தொடர்பாகத் தெரிவித்திருந்தேன்.


பாதுகாப்புத் துறையினர் முன்பள்ளிகளை நடத்துவதை நிறுத்தவேண்டும். பாதுகாப்புத் துறையின் கீழுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 30 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. தற்போது அது சுமார் 40 ஆயிரம் ரூபாவாகும். இந்தத் தொகையைத் தவறாக நினைக்கவில்லை. அதேசமயம் கல்வி அமைச்சின் கீழுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 6 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படுகிறது. முழு முன்பள்ளிகளும் கல்வி அமைச்சின் கீழ் வரவேண்டும். கல்விக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் என்ன சம்பந்தம்? அது ஏன் வடக்கு மாகாணத்தில் மட்டும் நடக்கிறது?

அடுத்து வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே தொடங்கப்பட்ட கட்டடங்களை முடிப்பதற்கு நிதி மிகவும் தேவைப்படுகிறது. தொடங்கப்பட்ட கட்டடங்கள் ஓரளவுக்கு முடிக்கப்படுவதை உறுதி செய்வதற்குக் குறைந்தபட்சம் இரண்டு பில்லியன் ரூபா தேவை என்று வடக்கு மாகாண சபையால் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்திலும் பிரதமர் கவனத்தில் கொள்ளுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன் என்றார். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 20.02.2025 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

கலாபூசணம்

## செல்லையா விஸ்வலிங்கம் ஸ்தபதி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (12.03.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எமது அழைப்பு தவறவிடுபட்டவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.
தொ.பே: 077 432 9153
074 190 6182

(Cs.57660) (N.1)

# மரக்காலையில் முதிரைக்குற்றிகள் உரிமையாளருக்கு தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

சாவகச்சேரிப் பிரதேசத்தில் சட்டவிரோத மரக்குற்றிகளை இருப்பில் வைத்திருந்த மரக்காலை உரிமையாளருக்கு நீதிமன்றம் ஊடாக 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட வனவளத் திணைக்களத்தினருக்குக் கிடைத் தகவலுக்கு அமைய அனுமதிப் பத்திரங்கள் இன்றி இருப்பில் வைக்கப்பட்டிருந்த முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப் பட்டுள்ளன.

மரக்காலையின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப் பட்ட போது, சந்தேகநபரைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்றம், 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது. (எ-125)

# மதப்பிரசாரத்தில் ஈடுபட்ட மதகுருமார் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

சுற்றுலா விசாவில் நாட்டுக்குள் வந்து மாதகல் பகுதியில் மதப்பிரசாரத்தில் ஈடுபட்ட இரு மதகுருமார் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

சுற்றுலா விசாவில் நாட்டுக்கு வந்த இரு கிறிஸ்தவ மதகுருமார் மாதகல் பகுதியில் கடந்த சனிக்கிழமை மதப்பிரசார பணிகளில் ஈடுபட்டனர் என்று சிவசேனை அமைப்பு இளவாலைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தது.

இது தொடர்பில் இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு விமான நிலைய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளுக்கு அறிவித்ததை அடுத்து, அந்த இரு மதகுருமார் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-33-125)

**வெதுப்பகம் கட்டப்படும்**

யாழ்ப்பாணத்தில் வெதுப்பகம் கட்டுவதற்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

துரைராஜா சதீஸ்குமார் 074 264 4291

(CS/57713) J-1

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**


பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57653) J-1

# மரண அறிவித்தல்

## சுப்பையா திரவியம்



தோற்றம் 01.07.1940 மறைவு 10.03.2025

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை வீராங்கொடையை வசிப்பிடமாகவும் தற்போது சம்பியன் லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா திரவியம் நேற்று (10.03.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாவின் பாசமிகு மனைவியும், கணேசநாதன் (வெள்ளை) அவர்களின் தாயாரும், சுவர்ணாவின் மாமியும், தக்ஷன், விக்கினேஸ்வரன், திலகராஜ், கிரிதரன், தேனுஜா ஆகியோரின் பேர்த்தியாரும், சாக்ஷிதாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.36, நந்தாவில் லேன்,
செம்பியன் லேன்,
K.K.S. றோட்,
கொக்குவில்.

தகவல்:
மகன் -கணேசநாதன் (வெள்ளை)
077 528 3538

(CS/57703) N-1

செய்தி : 021493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.